செ.வெ.எண்: 49 / ஜூன் /2020 நாள்: 16.06.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கூட்டுறவு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், சிறு நிதி வங்கிகள் மற்றும் உள்ளூர் பகுதி வங்கிகள் உட்பட அனைத்து வணிக வங்கிகள்/நிறுவனங்கள், அனைத்து இந்திய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFCs) (வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் உட்பட) (கடன் வழங்கும் நிறுவனங்கள்) வேளாண் கடன்கள், சில்லறை மற்றும் பயிர்கள் கடன்கள் உட்பட அனைத்து விதமான கடன் தவணை தள்ளிவைப்பு காலம் ஆகஸ்ட் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**

**இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைக்கு மாறாக கடன் தவணைகளை வசூல் செய்யும் வங்கிகள் / நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ,ஆ.ப, அவர்கள் எச்சரிக்கை.**

---------------------

COVID – 19 கொரானா வைரஸ் தொற்று நோய் இந்திய பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக இந்திய ரிசர்வ் வங்கி கடந்த 27.03.2020 அன்று வெளியிட்ட அறிவிக்கையில் (Notification Ref No. DOR.No.BP.BC.47/21.04.048/2019-20) கூட்டுறவு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், சிறு நிதி வங்கிகள் மற்றும் உளளூர் பகுதி வங்கிகள் உட்பட அனைத்து வணிக வங்கிகள்/நிறுவனங்கள், அனைத்து இந்திய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFCs) (வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் உட்பட) (கடன் வழங்கும் நிறுவனங்கள்) வேளாண் கடன்கள், சில்லறை மற்றும் பயிர்கள் கடன்கள் உட்பட அனைத்து விதமான கடன்களையும் மார்ச் 01, 2020 மற்றும் மே 31, 2020-க்கு இடையில் வரவிருக்கும் அனைத்து கடன் மீள செலுத்தும் தவணைகளை தள்ளிவைத்து வழிகாட்டுதல்கள் வழங்கியுள்ளது.

மேலும், இக்கடன் தவணை தள்ளிவைப்பு காலம் ஆகஸ்ட் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது, வங்கிகளில் நிலுவையில் உள்ள தொகையின் மீது வட்டி கணக்கீடு செய்யப்படும் எனவும், தெரிவித்துள்ளது. இந்நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிக்கைக்கு மாறாக கடன்தாரர்கள் தவணை தொகையை செலுத்திட வங்கிகள் / நிறுவனங்கள் சார்பில் கட்டாயப்படுத்துவதாக பொதுமக்களிடம் இருந்து மீண்டும் மீண்டும் புகார்கள் வரப்பெறுகின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிக்கைக்கு மாறாகவும், அறிவிக்கையை மீறி செயல்படும் வங்கிகள் / நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**